# தமிழ் மலையாள வினையெச்சங்கள்

*முனைவர் அ. ஹெப்சி ரோஸ் மேரி*
உதவிப் பேராசிரியர், கேரளப் பல்கலைக்கழகம்
காரியவட்டம், திருவனந்தபுரம்

மலர்: 4

இதழ்: 3

மாதம்: ஜனவரி

வருடம்: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

*தமிழோடு மிகவும் நெருங்கிய உறவுடைய திராவிட மொழியே மலையாளம். வாக்கிய அமைப்பு முறையிலும் புணர்ச்சியை விளக்கும் முறையிலும் இம்மொழிகள் ஒன்றோடொன்று ஒன்றுபட்டே காணப்படுகின்றன. தமிழ் இலக்கணக்கூறுகளுள் ஒன்றான வினையெச்சத்தை எடுத்து இது மலையாளத்தில் உண்டா? அதற்கு மலையாள இலக்கண நூல்கள் என்ன கலைச்சொல்லை அதாவது வடமொழி சாந்த கலைச்சொல்லையா அல்லது தமிழோடு இணைந்த கலைச்சொல்லையா பயன்படுத்துகின்றன? இது எந்நிலையில் மொழியில் பயின்று வந்துள்ளன எந்த மரபைப் பின்பற்றியுள்ளன? என்பதையும் இக்கட்டுரை விளக்க முயல்கிறது.*

### "வினையெச்சம்" என்னும் கலைச்சொல்

தொல்காப்பியர் வினையியலில் இருவகை எச்சங்களைப் பற்றிக் கூறுகையில் முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி என வினையெச்சத்தையும்அவற்றுள்செய்யும்என்னும்பெயரெஞ்சுகிளவி என்று பெயரெச்சத்தையும் குறிப்பிட்டுள்ளார். மலையாளத்தில் வினையெச்சம் என்ற கலைச்சொல்லை எவ்வாறு பயன்படுத்தி யுள்ளனர் என்று பார்க்கும்போது, 'வினையெச்சம்' என்ற தமிழ் கலைச்சொல்லை அவ்வாறே மலையாள இலக்கண ஆசிரியர்கள் பயன்படுத்துகின்றனர். முதன்முதலாக மலையாளத்தில் 1863 இல் ரெவரண்ட். ஜோர்ஜ்மாத்தன் என்பவருடைய மலையாய்மையுட வியாகரணம் என்ற நூல்தான் வினையெச்சத்தைப் பற்றி கூறுகின்றது. அதைத்தொடர்ந்து குண்டர்ட்டின்றே மலையாள வியாகரணம் 1851 இல் வினையெச்சம் என்ற கலைச்சொல்லைப் பயன்படுத்து வதோடு அதனை முன்வினையெச்சம் பின்வினையெச்சம் என்று இரண்டாகப் பிரிக்கிறது. அவரைத்தொடர்ந்து வந்த ஏ.ஆர். ஆர் ராஜ ராஜவர்மா பற்றுவினையெனப் பெயரெச்சத்தையும், வினையெச்சம் என வினையெச்சத்தையும் குறிப்பிடுகிறார்.

**வினையெச்சம் என்றால் என்ன?**

வினையெச்சம் என்றால் என்ன? என்ற கேள்விக்குத் தொல்காப்பியமோ, இடைக் கால இலக்கணங்களான வீரசோழியமோ, நேமிநாதமோ இலக்கணம் கூறவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர்களே இக்கேள்விக்குவிடையளிக்கின்றனர். வினையை ஒழிபாக நிற்றலின் வினையெச்சம் எனப்பட்டது என்று இளம்பூரணரும், வினையெச்சமாவது மற்றொரு வினைச் சொல்லோடல்லது முற்றுப் பெறாது நிற்கும்" என்று தெய்வச்சிலையாரும் குறிப்பிட்டுச் செல்கின்றனர். மரபிலக்கணங்களில் நன்னூலார் தான் வினையெச்சத்திற்கு வரையறுக்கப்பட்ட இலக்கணம் கூறுகிறார். அவர்

**'தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை**
**ஒழிய நிற்பது வினையெச்சமே'**

**(நன் 342)**

எனத் தொழிலும் காலமும் தோன்றி வினைமுற்றுவதற்கு வேண்டிய பால் தோன்றாது வினையெஞ்ச நிற்பது வினையெச்சம் என்கிறார்.

மலையாளத்தில் வினையெச்சங்களைப் பற்று வினையின் கீழ் அடக்குகின்றனர். ஏ. ஆர். ராஜராஜவர்மா. ஒரு வினையின் கீழ் அடங்கும் பற்று வினை வினையெச்சம் என்றும் ஒரு பெயருக்குக் கீழ் அடங்கும் பற்றுவினையை பெயரெச்சம் என்றும் கூறுகிறார். அதாவது பற்று என்பது அவாவுதல் அல்லது விரும்புதல் என்பது பொருள். பற்றுவினை என்பது ஒரு வினைய முற்றுபெறாது மற்றொரு வினைனய அவாவி நிற்றல் என்பதாகும்.

எ.டு.

பறஞ்ஞு கேட்டு, (வொல்லிக் கேட்டேன்) தேச்சு குளிச்சு- (தேய்த்து குளித்தேன்) வினையெச்சம்

பறஞ்ஞ காரியம், (சொன்ன செய்தி) கொடுத்த வஸ்து (கொடுத்த பொருள்) - பெயரெச்சம்

**வாய்பாடு அடிப்படையில் வினையெஞ்சு கிளவி**

தொல்காப்பியர் வினையெச்சத்தை வாய்பாடுகளின் அடிப்படையில் வரையறை செய்கிறார். அவையாவன.

***செய்து செய்பூச் செய்யு செய்தெனச்***
***செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென***
***அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி***

***(தொல். சொல்.228)***

என ஒன்பது வாய்பாடுகளால் கூறியுள்ளார். வரையறை செய்வதால் ஏற்படுகின்ற தெளிவைவிட வாய்பாடுகளால் ஏற்படுகின்ற தெளிவு எவ்வகையிலும் குறைவானதாகத் தோன்றவில்லை (1972:210) என்ற ச. அகத்தியலிங்கத்தின் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மேலும் தொல்காப்பியர் பின், முன், கால், கடை, வழி, இடத்து என்ற (தொ.சொ.229) இவ்வீறுகள் யாவும் வினையடைப் பெயர்கள் என்றும் தொடர் அமைப்பில் பெயரெச்சத் தொடராக நின்றும் பயன் வகையில் வினையடைகளாகச் செயலாற்றும் தன்மையுடையன என்றும் மோ. இசரேயேல் குறிப்பிடுகிறார்.

வீரசோழியர் வடமொழி இலக்கண மரபுப்படி துமந்தம், துவாந்தம் என்ற பிரத்தியங்களின் கீழ் வினையெச்சங்களை விளக்கியுள்ளார். துமந்தப் பிரத்தியமும் துவாந்தப் பிரத்தியமும் முறையே செய, செய்து என்னும் வினையெச்ச வாய்பாட்டையே குறிக்கின்றன. இவற்றுள் துமந்தப் பிரத்தியம் -க, -பான்,-தற்கு-வான், -அ என்னும் ஆறு விகுதிகளையும் துவாந்தப் பிரத்தியம், -அ, -இட்டு, -து, -உ, -இ என்னும் ஐந்து விகுதிகளையும் கொண்டுள்ளது (வீ.சோ.67, 68). பின் தோன்றிய நேமிநாதமும் (நே. நா.68)

நன்னூலும் (நன்343) தொல்காப்பிய அடிப்படையில் பன்னிரெண்டு வாய்பாடு களைக் கூறியுள்ளன. கீழ்க்காணும் அட்டவணை தொல்காப்பியமும் இடைக்கால இலக்கண நூல்களும் சுட்டும் வினையெச்ச வாய்பாடுகளை வரையறுக்கிறது.

**தமிழ் இலக்கண நூல்கள் சுட்டும் வினையெச்ச வாய்பாடுகள்**

| தொல்காப்பியம் | வீரசோழியம் | நேமிநாதம் | நன்னூல் |
|---|---|---|---|
| | | | |
| செய்து | துவாந்தம் | | |
| (-அ, -இட்டு, -து, -உ, -இ) | செய்து | செய்து | |
| செய்யூ | - | - | செய்யூ |
| செய்பு | - | செய்பு | செய்பு |
| - | - | செய்யா | செய்யா |
| செய்தென | - | செய்தென | செய்தென |
| செய்யியர் | - | - | செய்யியர் |
| செய்யிய | | செய்யிய | செய்யிய |
| செயின் | - | செயின் | செயின் |
| செய | துமந்தம் | | |
| (-பொருட்டு, -க, -பான்,<br>-தற்கு, -வான், -அ) | | | |
| செயற்கு | - | செயற்கு | - |
| -பின் | - | -பின் | - |
| -முன் | - | -முன் | - |
| -கால் | - | - | - |
| -கடை | - | - | - |
| -வழி | - | -பான் | -பாக்கு |
| -இடத்து | - | -பாக்கு | -வான் |

**தமிழ் மலையாள வினையெச்ச வகைப்பாடுகள்**

தமிழ் இலக்கண நூல்கள் வினையெச்சங்களை வாய்பாட்டு அடிப்படையில் வகைப்படுத்தும் போது மலையாள இலக்கண நூல்களில் மலையாழ்மையுடே வியாகரணம் ஒழிந்த ஏனைய இலக்கண நூல்கள் முன்வினையெச்சம், பின்வினையெச்சம், நடுவினையெச்சம் என வகைப்படுத்து வதைக்காணலாம்.

ஜோர்ஜ் மாத்தன் மலையாழ்மையுடே வியாகரணத்தில் வினையெச்சத்தை வசனாதாரம் என்று அழைத்து அதனை ஆந்தம், வந்தம், நந்தம், லந்தம் என நான்காக வகைப்படுத்தியுள்ளார். இவை வடமொழி இலக்கண மரபைப் பின்பற்றி காலங்களின் அடிப்படையில் பிரிக்கப் பட்டதாகும்.

**ஆந்தம்**

வினையடிக்குப் பின் எதிர்காலத்தைக் குறிக்க - உந்நு என்ற பிரத்தியம் ( உருபு)

சேர்க்கப்படும். சில இடங்களில் அது அ, என்றும் ஏ என்றும் வரவும்பெறும் என்று மலையன்மையுடே வியாகரணம் கூறுகிறது. ஏனைய இலக்கண நூல்கள் இதனை நடு வினையெச்சம் என்று அழைக்கின்றனது.

எ.டு

படிக்குந்நு - படி+ உந்நு - நிக. கால வி.மு

படிக்க, படிக்காத - அ - படிக்காத தோற்று,

படிக்கவே பாசாயி

படிக்கே, படிக்காதே - ஏ,

**வந்தம்**

வந்தம் என்னும் வினையெச்சத்தில் இறந்தகால உருபு இரட்டித்து வரும். (நடந்நு). இறந்தகால உருபுகளோடு வைச்சு, இட்டு கொண்டு என்ற துணைவினைகள் இவ்வந்தத்தில் வரும் (அவன் விஷம் திந்நிட்டு மரிச்சு- விசம் சாப்பிட்டதால் இறந்தான்) என்பது ஜார்ஜ் மாத்தனின் கருத்து ஆனால் ஏனைய இலக்கண ஆசிரியர்கள் இதை முன்வினையெச்சம் என்று அழைக்கின்றனர்.

**நந்தம்**

நந்தம் என்பது எதிர்கால வினையெச்சமாகும். இதில் இன் என்னும் உருபு ஆன் ஆகத் திரியும் (நடக்குவின் - நடக்குவான் போயி). இதனை ஏனைய மலையாள இலக்கண நூல்கள் எதிர்கால பின்வினையெச்சம் என்று அழைக்கின்றன. இவ்வினையெச்சம் ஆதாரத்தின்றே சாத்தியதையையும், சங்கதியையும் காட்டுவதற்குப் பயன்படுத்துவதாகும்.

எ.டு நீ குளிப்பான் போகருது

தமிழில் வரும் பானோடு

இதனை ஒப்பிடலாம்.

**லந்தம்**

லந்தம் என்பது இரண்டாக வகைப்படுத்தப்படுகிறது. வர்த்தமான லந்தம் (எதிர்கால லந்தம்) பூத லந்தம் (இறந்தகால லந்தம்) கேரள பாணினியம் எச்ச வினைகளைப் பெயரெச்சம், (நாமாங்கம்) வினையெச்சம் (கிரியாங்கம்) என் இரண்டாக வகைப்படுத்துகிறது. மேலும் வினையெச்சத்தை முன்வினையெச்சம், பின்வினையெச்சம், தன்வினையெச்சம், நடு வினையெச்சம், பாக்ஷிய வினையெச்சம் என ஐந்தாக வகைப்படுத்துகிறது.

தொல்காப்பியர் செய்யா என்னும் வினையெச்சத்தை வினையெச்ச வாய்பாட்டில் சேர்க்கவில்லை. ‘செய்யா’ என்னும் வினையெஞ்சு கிளவியும் அவ்வியல் திரியா தென்மனார் புலவர் (தொ. எ. 223) என்ற சூத்திரத்திற்கு உரையெழுதிய சேனாவரையர் செய்யா என்பது செய்யூ என்பதன் திரிந்த வடிவமாகக் கொள்கிறார். ஆனால் நன்னூலார் செய்யா, செய்யூ என்ற இரண்டையும் தனித்தனி வாய்பாடாகக் கொள்கிறார். நேமிநாதம் செய்யூ என்ற வாய்பாட்டைச் சுட்டாது ‘செய்யா’ என்பதை மட்டும் சுட்டுகிறது. வீரசோழியம், தொல்காப்பியம் கூறாத -பான், -வான், என்ற வினையெச்ச விகுதிகளைச் சுட்டிக் காட்டுகிறது. நேமிநாதம், வீரசோழியரைப் பின்பற்றி -பான், -வான், என்ற வினையெச்ச விகுதிகளை அமைத்ததோடு வீரசோழியம் கூறாத -பாக்கையும் வினையெச்ச விகுதியாகக் கொள்கிறது. நன்னூல் வீரசோழியம் கொண்ட -வான், -பான் என்ற விகுதியையும் நேமிநாதம் சுட்டிய -பாக்கையும் வினையெச்ச விகுதிகளாகக் கொண்டுள்ளது. இது பிற்காலத்தில் மொழியில் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டுகிறது.

**முடிவுரை**

வினையெச்சத்தை விளக்கும் முறையில் மலையாள இலக்கண நூல்களுள் பெரும்பான்மையானசை “வினையெச்சம்” என்ற கலைச்சொல்லையே பயன்படுத்து கின்றன. மலையாளத்தில் வாய்பாடுகளின்

அடிப்படையில் பிரிக்கும் மரபு காணப்படவில்லை. தமிழில் காணலாகும் வீரசோழியம் வடமொழி இலக்கண மரபைப் பின்பற்றி துமந்தம் துவாந்தப் பிரத்தியங்களின் கீழ் வினையெச்சத்தை வகைப்படுத்துகிறது அத்தகைய மரபும் மலையாள இலக்கண நூல்களில் காணப்படவில்லை. இதைப் பார்க்கும் போது மலையாள இலக்கண நூல்கள் தனக்கென ஒரு மரபைப் பின்பற்றி மொழியியலாரின் கருத்துக்களையும் ஏற்றே வினையெச்சத்தை வகைப்படுத்தியுள்ளன என்பதை இதன்வழி அறிந்துகொள்ளலாம்.

### பயன்பட்ட நூல்கள்

1. அகத்தியலிங்கம் தொல்காப்பிய உருவாக்கம், மெய்யப்பன் தமிழ்ழாய்வகம், சிதம்பரம், 2001.
2. அருள்ராஜ். வே.சா - மலையாள இலக்கண வரலாறு, தமிழ் பல்கலைக் கழம், தஞ்சாவூர், 2000.
3. ஆறுமுக நாவலர் - நன்னூல், தமிழிப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.
4. இசரேயல். மோ - இலக்கண ஆய்வு வினைச்சொல், சிந்தாமணி வெளியீடு, சென்னை, 1976.
5. இளயபெருமாள்.மா லீலாதிலகம் (மொ.பெ), தமிழ்ப்புத்தக நிலயம், சென்னை 1971.
6. கேரள பாணினீயம்(மொ.பெ), தமிழ்த் துறை, கேரளப் பல்கலைகழகம், 1977.
7. கோவிந்தராச முதலியார் (ப.ஆ) - நேமிநாதம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
8. புத்திரமித்திரனார் - வீரசோழியம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நுற்பதிப்புக்கழகம்.
9. Ezhuthachan.K.N The History of the Grammatical Theories in Malayalam, DLA, Trivandrum.